# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2062/41 - 2018 මාර්තු මස 16 වැනි සිකුරාදා - 2018.03.16

*2062/41 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 3/2/3/10/254.

கம்பஹா, அத்தனகல்லை, மினுவான்கொடை கூட்டிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு ஆலையின் உட்பிரவேச வீதியை மேம்படுத்துதல் மற்றும் நீர்குழாய் பதித்தல் ஆகிய நடவடிக்கைகளின் நிமித்தம் வழியுரிமையை எடுத்துக் கொள்வதற்கு தேவையான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்**

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில், அத்தனகல்லை பிரதேச செயலகப் பிரிவில், இல. 365சீ, கரஸ்னாகல தெற்கு கிராம அலுவலர் பிரிவில், கரஸ்னாகல கிராமத்தில் அமைந்துள்ள, அளவையாளர் நாயகத்திற்குப் பதிலாக பிரிவுக்குப் பொறுப்பான நிலஅளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட கிராம 4051 உடைய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணிப்பகுதி:

*1. துண்டு இல. 01*

காணியின் பெயர் : தம்முலஹேன, கொரககஹலன்த, ஒயபொடவத்த ஹல்கஹலன்த மற்றும் கொரொக்கொடுவவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், அண்ணளவாக 20 - 30 வருடங்கள் வயதுடைய 8 தென்னை மரங்கள், 7 பலா மரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கலப்புப் பயிர்ச்செய்கையொன்று காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.0312 ஹெக்டயார்.

*2. துண்டு இல. 02*

காணியின் பெயர்: தம்முலஹேன, ஹல்கஹவத்த, ஒயபொட வத்த, ஹல்கஹலன்த மற்றும் கொரொக்கொடுவவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், அண்ணளவாக 10 - 20 வருடங்கள் வயதுடைய 6 தேக்கு மரங்களை உள்ளடக்கிய கலப்புப் பயிர்ச் செய்கையொன்று காணப்படுகின்றது; ஆரம்ப உரிமை கோருபவர்: கே. ஏ. பத்மலால் ஜெயசூரிய, இல. 52, நிகஹெடிகந்த, கரஸ்நாகல; விஸ்தீரணம் : 0.0217 ஹெக்டயார்.

*3. துண்டு இல. 03*

காணியின் பெயர் : ஒயபொடவத்த, ஹல்கஹலன்த மற்றும் கொரொக்கொடுவவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், அண்ணளவாக 10 - 15 வருடங்கள் வயதுடைய 02 தென்னை மரங்கள், ஒரு பலா மரம், 06 தேக்கு மரங்கள் மற்றும் மஹொகனி மரமொன்றினையும் உள்ளடக்கிய கலப்புப் பயிர்ச்செய்கை யொன்று காணப்படுகின்றது; ஆரம்ப உரிமை கோருபவர் : ஏ. ஏ. பிரபாத் சமன்த விஜேதிலக, அலவல, வேயான்கொடை; விஸ்தீரணம் : 0.0294 ஹெக்டயார்.

1A - G 27304 - 32 (2018/03)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*4.* **துண்டு இல.** ***04***

காணியின் பெயர் : ஒயபொடவத்த, ஹல்கஹலன்த மற்றும் கொரொக்கொடுவவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர் : சுமித் ஜெயன்த ஹரிஸ்சந்திர, கரஸ்நாகல, அலவல, வேயான்கொடை; விஸ்தீரணம் : 0.0103 ஹெக்டயார்.

*5.* **துண்டு இல.** ***05***

காணியின் பெயர்: ஒயபொடவத்த, ஹல்கஹலன்த மற்றும் கொரொக்கொடுவவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர் : கே. டபிள்யூ. ஜெகத் அன்டன், இல. 73/ஏ, நிகஹெடிகந்த, வேயான்கொடை; விஸ்தீரணம் : 0.0222 ஹெக்டயார்.

*6.* **துண்டு இல.** ***06***

காணியின் பெயர் : ஒயபொடவத்த, ஹல்கஹலன்த மற்றும் கொரொக்கொடுவவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர் : பீ. அலகியவத்த, இல. 54/ஜீ, ஹங்சகிரி வீதி, கம்பஹா; விஸ்தீரணம் : 0.0132 ஹெக்டயார்.

*7.* **துண்டு இல.** ***07***

காணியின் பெயர் : ஒயபொடவத்த, ஹல்கஹலன்த மற்றும் கொரொக்கொடுவவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; ஆரம்ப உரிமை கோருபவர்: பீ. அலகியவத்த, இல. 54/ஜீ, ஹங்சகிரி வீதி, கம்பஹா; விஸ்தீரணம் : 0.0004 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு அத்தனகல்லை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உடந்தை தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தம் வசமுள்ள உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய எழுத்தாவணங்களை பரிசீலனை செய்கின்ற திகதியன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

டி. எம். ரத்னாயக,
பிரதேச செயலாளர்,
அத்தனகல்லை.

பிரதேச செயலகம்,
அத்தனகல்லை,
2018, பெப்புருவரி 28.

03 - 1336